செ.வெ.எண் - 919 நாள்: 03.12.09

## செய்தி வெளியீடு 3.12.2009

## நாகப்பட்டினம் மாவட்டத்தில் தனியார் பள்ளி வேன் குளத்தில் மூழ்கியதால் உயிரிழந்த 9 குழந்தைகள் மற்றும் 1 ஆசிரியை குடும்பங்களுக்கு மொத்தம் 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி

## முதலமைச்சர் கலைஞர் ஆணை

நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் வட்டம் கரியாப்பட்டினம் கிராமத்தில் உள்ள தனியார் நர்சரி பள்ளிக்குச் சொந்தமான வேன் ஒன்று 22 குழந்தைகள் மற்றும் ஆசிரியைகளை இன்று காலையில் ஏற்றிச் சென்றுள்ளது. அந்த வேன், கத்திரிப்புலம் பனையடிகுத்தகை என்ற இடத்தில் சென்றபோது, கட்டுப்பாட்டை இழந்து சாலையோரம் இருந்த குளத்தில் கவிழ்ந்து மூழ்கிய விபத்தில் 9 குழந்தைகளும் ஆசிரியை ஒருவரும் உயிரிழந்துள்ளனர். இந்த துயர சம்பவம் குறித்த செய்தி அறிந்ததும் மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்துள்ள முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குத் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளதுடன், உயிரிழந்த குழந்தைகளின் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும்; உயிரிழந்த ஆசிரியையின் குடும்பத்திற்கு 1 இலட்சம் ரூபாயும் ஆக மொத்தம் 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயை முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரண உதவியாக வழங்கிட இன்று (3.12.2009) ஆணையிட்டுள்ளார்.

* * *

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9